# தமிழ் நிலம்

## உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

## பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி -2 | தி.பி. 2015 நளி 3 (18-11-84) 65 காசுகள் இதழ் எண் : 48 | பகுதி 46-48


# இந்திரா காந்தியின் சாம்பல் (அஸ்தி) மற்ற பொருள்களின் சாம்பலைப் போன்றதே!

## அறிவியலின் முன் அதற்கென்று தனிச்சிறப்போ, பெருமையோ, தனிக் குணநலன்களோ இல்லை!

## அரசு இந்துமத அடிப்படையில் அதை ஊர் ஊராக எடுத்துச் சென்று, மக்களின் வணக்கத்திற்கு வைத்து மக்களின் ஏராளமான வரிப்பணத்தை வீணாக்கியது தவறு!

### அறியாமையும் மூடநம்பிக்கையும் ஏழ்மையும் நிறைந்த நாட்டில் அரசே இப்படிச் செய்வது பொது மக்களை ஏமாற்றுவதாகும்! ஆளும் கட்சிக்கு வலிவு தேடுவதாகும்!

## இக்கொடுமைச் செயலை அறமன்றம் தடுத்து நிறுத்த வேண்டும்!

## நடுவண், மாநில அரசுகளை எதிர்த்துச் சென்னை உயர்நெறி மன்றத்தில் பாவலரேறு முறைவழக்குத் (ரிட்) தொடுத்தார்!

## வரலாற்றிலேயே முதல் முறையாக உயர்நெறி மன்றத்தில் இனிய, தூய தமிழில் தாமே வழக்காடினார் பாவலரேறு!

சென்னை : நவ 9 : இந்திய அரசுக்கு வரிசெலுத்தும் குடிமகன் ஒருவன் என்னும் வகையில், இந்திய அரசும், தமிழக அரசும், மறைந்த இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தியின் சாம்பலை அஸ்தி என்னும் பெயரில், பொது மக்களின் வழிபாட்டிற்கும் வணக்கத்திற்குமாக, ஊர் ஊராக, நகரம் நகரமாகத் தனி ஏற்பாட்டுத் தொடர்வண்டிகள், வானூர்திகள், வழியாக, ஏராளமான பொருட்செலவில் கொண்டு செல்லப் பட்டதைக் கண்டித்தும் எதிர்த்தும், இவ்வறிவியல் பொருத்தமல்லாத இந்துமத மூடநம்பிக்கை நிறைந்த செயலை உடனே தடுத்து நிறுத்த வேண்டுமென்றும், உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர். பாவலரேறு பெருஞ்சித்திரனார் கடந்த 9.11.84 ஆம் நாள், ஒரு முறைவழக்கை (ரிட்) சென்னை உயர்நெறி மன்றத்தில் தொடுத்தார்.

இவ்வழக்கு உயர்நெறி மன்ற நடுவர் எசு. நடராசன் முன்னர் வந்தது.

பாவலரேறு பெருஞ்சித்திரனார், இவ்வழக்குத் தொடர்பாகத் தம் முறையீட்டை, நடுவர் முன், தாமே எடுத்துரைத்தார். அவர் வழக்காடும் பொழுது ஏராளமான வழக்கறிஞர்களும், பார்வையாளர்களும் பொதுமக்களும், செய்தியாளர்களும் உயர்நெறி

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம்: உ. த. மு. க.

# கொற்கைத் தமிழ் மன்றம் நடத்திய திருவள்ளுவர் சிலைதிறப்பு விழா -வானொலித் தொகுப்புரை-

(22-8-84 அன்று காலை 7-30 முதல் 8 மணி வரை திருநெல்வேலி வானொலி நிலையத்திலிருந்து ஒலி பரப்பாகிய திருவள்ளுவர் சிலை திறப்பு விழா நிகழ்ச்சியின் வானொலித் தொகுப்பு முழுமையாக அப்படியே தரப்பட்டுள்ளது.)

ஆல் இண்டியா ரேடியோ ; திருநெல்வேலி வானொலி நிலையம்.

நேரம் 7 மணி 30 நிமையம்.

அண்மையில் ஏரல் கொற்கைத் தமிழ்மன்றத்தின் சார்பில் நடைபெற்ற திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழாவின் வானொலித் தொகுப்பினை நேயர்களுக்கு வழங்குகிறோம்.

திருவள்ளுவர் 2015-ஆம் ஆண்டு கடகத் திங்கள் 27, 28 காரி, ஞாயிறு, அஃதாவது 11.8.84, 12.8.84 ஆகிய இரு நாள்களில் ஏரல் கொற்கைத் தமிழ் மன்றத்தின் சார்பில் ஏரலில் திருவள்ளுவர் சிலைத் திறப்புவிழாவும் கொற்கைத் தமிழ் மன்றத்தின் ஏழாம் ஆண்டு நிறைவுவிழாவும் மிகச் சிறப்பாக நடந்தேறின.

11.8.84 'சனி'க்கிழமை மாலை 3 மணியளவில் சிறந்தொண்ட நல்லூர் அருள்மிகு சங்கரன்கோவில் வளாகத்திலிருந்து புலவர் தமிழ்மாறன, புலவர், இ.மா. கணபதி ஆகியோரின் தலைமையில் யானை முன்வர மேளதாளங்களுடன் இளைஞர்கள் சிலம் பாட்டம், கழியாட்டம் ஆடிவர, பள்ளிமாணவர்கள் அணிவகுத்துவர மாபெரும் ஊர்வலம் ஒன்று புறப்பட்டு இரவு 7 மணியளவில் ஏரல் திருவள்ளுவர் கோட்டத்தை அடைந்தது.

திருவள்ளுவர் சிலைத்திறப்புவிழா, ஏரல் கால்வாய்க் கரையினில் அமைந்துள்ள திருவள்ளுவர் கோட்டத்தில் ஏரல் அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி மாணவியரின் இறைவாழ்த்துடன் தொடங்கியது. விழாவிற்குப் பேராசிரியர், பண்டாரகர் க.ப. அறவாணன் தலைமையேற்ருர். விழாவிற்கு வருகை தந்த யாவரையும் கொற்கைத் தமிழ்மன்றச் செயலர் புலவர். ஐயாத்துரை வரவேற்ருர்.

முதல் உலகப் பேராசான் திருவள்ளுவர் சிலையை உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள் திறந்து வைத்தார். தலைமையேற்ற பேராசிரியர் க.ப. அறவாணன் தமது தலைமையுரையில்,

"இதுபோன்ற உணர்ச்சி மிகு விழாக்கள் உறுதியாக இளநெஞ்சங்களிலும் நன்கு கனிந்த நெஞ்சங்களிலும் வடும்பாகத் தழும்பாக ஊறி, அதுவே நிலைபெற்று ஒரு பத்து ஊருக்கு ஓரிடத்திலே இப்படி நடந்தால் தமிழ்நாடு இன்னும் ஒருசில பத்து ஆண்டுகளில் ஒரு பொன் விளையும் பூமியாக மாறிவிடும்; பழைய கருத்து விளையும் மண்ணுக இது மாறிவிடும். அப்பேர்ப்பட்ட ஓர் அரிய நிகழ்ச்சியை நீங்கள் நடத்திக் காட்டியிருக்கிறீர்கள். அதற்காக உங்கள் அனைவரையும் நெஞ்சார நான் பாராட்டுகிறேன். அதிலே பங்கேற்ற குழந்தைகள், பங்கேற்ற இளைஞர்கள், அதற்குப் பின்புலமாக இருந்த பெரியவர்கள், ஏறத்தாழ மூன்று மணிநேரம் நடந்து களைத்துச் சோர்ந்துபோன அத்தனைப் பெருமக்களையும் நெஞ்சாரப் பாராட்டுகிறேன். உலகத்தில் எத்தனையோ சிற்றூர்களும் பேரூர்களும் நகரங்களும் அறியாமையில் மூழ்கிக் கிடக்கிறபோது ஓர் அறிந்த தமிழ் உலக மேதைக்கு அழியாத சின்னத்தை அமைத்தீர்களே! அதற்காக எவ்வளவு வாழ்த்தினாலும் தகும்."

தொடர்ந்து அறிஞர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர். திருவைகுண்டம் உதவிச் செயற்பொறியாளர் திரு ஞானதோமா.

"அந்தக் காலத்தில் நான் வந்த உடனேயே என்னுடைய அலுவலகத்தின் வெளியிலேயே திருக்குறள் எழுதி வைத்திருந்தேன். அதைக்கண்டு, 'ஓகோ! வந்திருக்கின்ற பொறியாளர் ஒருவேளை தமிழ்ப் பற்றுளரோ' என நினைத்து ஓர் உள்ளம் அங்கு வந்து சேர்ந்தது. அதுதான் தமிழ்ச் சங்கரிய சிவசங்கு அவர்கள். அதற்குப்பின்னுல் தமிழால் நாங்கள் ஒன்றிணேம். அதன்விளைவு மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் இதே ஊரிலே 1961-ஆம் ஆண்டு பொன்னுடை போர்த்தப்பட்டுப் பாராட்டப்பட்டார்கள் என்னும் செய்தி இந்த ஊர் மக்களாகிய இளைஞர்கள் தெரிந்திருக்க வேண்டிய ஒன்று. அன்றே தேவநேயப் பாவாணர் இங்கே பாராட்டப்பட்டதற்குப் பின்னுல் பல ஊர்களிலே பல இடங்களிலே பல அறிஞர்களால் பாராட்டப்பட்டார் என்பது குறிப்பிடத் தக்கதாகும். அவ்வளவு தமிழ் உணர்ச்சியிலே சிறந்திருந்த இந்த ஊர் மக்களுடைய தமிழ்ப்பற்றை நான் பாராட்டுகிறேன். இங்கே இந்தச் சோலைவளமிக்க சாலையிலே-கரையோரத்திலே நிற்கின்ற திருவள்ளுவரை நீங்கள் அன்ருடம் கண்டு திருக்குறளை நினைந்து வாழ்க்கைக்கு வழிகாட்டியாகக் குறளையேற்றுக் கொள்ள வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கின்றேன்."

அடுத்து புலவர் தமிழ்மாறன், தூக்குக்குடி நவமணியடிகள் சாத்தன்குளம் முகதமிழக கலைமன்றத் தலைவா திரு.பெ.மு சுப்பிரமணியம், திரு. தென்னவன் கோ ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

புலவர் தமிழ்மாறன் :

"முதன்முதல் சுட்டப்பட்ட நூல் திருக்குறள். இதை நாம் தெரிந்து கொள்ள மறுப்போமென்ருல் உண்மையிலேயே நாம் திருக்குறளைத் தொட்டுப் பார்ப்பதற்குக்கூட அருகதையற்றவர்கள். அதற்காக ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொன்றைச் சொல்லி விடை பெற்றுக் கொள்கிறேன். இல்லறவியலிலே சொல்கிருர். 'தென்புலத்தார் விருந்து ஒக்கல் தான் என்று', என்ன செய்ய வேண்டுமாம், குடும்பத்தானுக்குக் கட்டளையிடுகிருர், தெற்கே உள்ளவனை முதலிலே கவனி, முதல் சட்டமே இதுதான், தெற்கேதான் தமிழ் இருக்கும். வடக்கே பார்க்காதே என்று கூடப் பழமொழி. 'வடக்குப்பக்கம் தலை வச்சிராதன்னு சொல்லுவோம்'. வடக்கேதான் சுடுகாடு இருக்கிறது. வடக்கே போகாதீர்கள். வடக்கு என்ருல் சாக்காடு என்று 'அர்த்த' மென்று சொன்னுன் பாவேந்தன. ஆகவே வடக்கே நீங்கள் உங்கள் திசையை விரித்துக் கொண்டு போவீர்களென்ருல் கண்டிப்பாக இருக்கும். தமிழ்நாடு ஆபத்து வந்துவிடுமென்று எச்சரிப்பதற்காகத்தான். தென்புலத்தார் என்று சொன்னுை. அடுத்தாற்போல் நாட்டுக்கு வருகிருன், என்ன சொல்கிருன்? 'தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு'. நாடு என்ருல் என்ன, இலக்கணமாம்? எடுத்த எடுப்பிலேயே சொல்கிருன். 'தக்கார்'! இந்த மண்ணின் மைந்தர்க்குத்தான இந்தநாடு சொந்தமாக இருக்க வேண்டும். 'மொழி!' எந்த மொழி சிறந்தது? முதல்பாட்டு, 'அகர' முதல எழுத்தெல்லாம்! உலகுக்கெல்லாம் 'அ'தான் முதல் எழுத்து. தமிழுக்கு மட்டுமன்று. உலக மொழி அனைத்துக்கும் 'அகரம்'தான். ஆகவே மொழிக்குத் தலைவன் 'அ'. தலைவர்களுக்குத் தலைவன் இறைவன். இதைத்தவிரத் தலைவனே இல்லையென்று சொன்னுன். ஆகவே இந்த மூன்று விதிகளைக் கற்றுக்கொண்டு நிமிர்ந்து நடவுங்கள் என்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன், நன்றி. வணக்கம்."

தொடர்ந்து வாழ்த்துரை வழங்கிய பத்தமடை, புலவர் வி. செந்தில்விநாயகம்,

"வள்ளுவப் பேராசான் வழங்கிய கருத்துகள் அன்றைய காலத்திற்கும் சரி, இன்றைய காலத்திற்கும் சரி, நாளை வருகின்ற காலத்திற்கும் சரி, எல்லாக் காலத்திற்கும் பொருத்தமான குறள். ஒரேயொரு குறளை மட்டும் சொல்கிறேன்.

"முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்" என்பது

வள்ளுவம். மன்னவனிடத்திலேயே எல்லாப் பொறுப்புமிருந்தது. இதிலே மூன்று கருத்துகளை உள்ளடக்கியிருக்கிருர். 'முறை' என்பது ஒன்று; 'செய்தல்' என்பது ஒன்று; 'காப்பாற்றுதல்' என்பது ஒன்று. இன்றைய நடைமுறையில் சொல்ல வேண்டுமென்ருல், 'சட்டமன்றத் துறை' என்ற ஒன்று; 'அதை நடைமுறைப் படுத்துகின்ற அரசு அலுவலகத்துறை' என்பது ஒன்று; இதை நடைமுறைப் படுத்தும்போது ஏற்படுத்துகின்ற சிக்கல்களைத் தீர்த்து வைக்கின்ற 'நீதித்துறை' என்ற ஒன்று. இந்த மூன்று துறைதான் அன்றும் ஆட்சிக்குச் சிறப்பு. இன்றும் ஆட்சிக்குச் சிறப்பு என்ற கருத்தை உள்ளடக்கி என்றும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலே திருக்குறள் அமைந்திருக்கிறது என்பதற்கு ஒரேயொரு குறளை மட்டும் சான்று சொல்லி, அந்த வள்ளுவப் பேராசானுடைய உருவச் சிலையைத் திறந்து வைக்கின்ற இந்த விழாவிலே வாழ்த்துவதற்கு நல்ல வாய்ப்பினைக் கொடுத்த பெருமக்கள் அத்தனைப் பேருக்கும் நன்றி சொல்லி, தனித்தனியாகச் சொல்லுவதற்குக் காலம் இடமில்லை என்பதாலே மொத்தமாக அத்தனைப் பேருக்கும் நன்றி சொல்லி விடைபெறுகிறேன் வணக்கம்."

செல்வி. சண்முகசுந்தரி செந்தில்விநாயகம் :

"தான்பிறந்த மண்ணை நினைக்கும்போது வான்புகழ் வள்ளுவனுக்குத்தான் முதலிடம் கொடுக்கிருன் ஆம்! உண்மை வெறும் புகழ்ச்சியில்லை. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்று பாடிப் பரவசமடைகிருன். ஏன்? வள்ளுவர் பாடிய ஒவ்வொரு குறளும் அமுதம். அமுதம், அமுதம், அமுதம் உண்டவர்க்குச் சாகா வரம் கிடைக்கும். குறளமுதத்தை உண்டவர்க்கும் சாகா நிலை கிட்டுமன்ருே? அமுதம் அரிதின் பெறக்கூடிய ஒன்று. குறளமுதமும் அரிதின் முயன்று உணரக் கூடிய ஒன்றல்லவோ?

நெல்லை மாவட்டத் தமிழாசிரியர் கழகத்தலைவர் புலவர் ஆ. பழனியாண்டி :

"இந்தத் தமிழ்க் குமுதாயத்திற்கு அ'து ஒன்றுதான் தேவைப்படுகிறது. எனவேதான் பாரதிதாசன் சொன்னுன். தமிழ்தான் உன்னுடைய நெஞ்சிலே அன்பை வளர்க்கப் போகின்றது. உனக்கு அறம், மறம் என்று வேற்றுமை தெரிய வேண்டுமா? வள்ளுவனுடைய குறளைப் படித்துக் காட்டு என்று சொலகிருன். அந்தப் பாடலை நான் கூறுகிறேன்.

"துன்பம் நேர்கையில் யாழெடுத்து — நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா? - நல்
அன்பிலா நெஞ்சில் தமிழில்பாடி — நீ
அல்லல் நீக்க மாட்டாயா - கண்ணே நீ
அல்லல் நீக்க மாட்டாயா?
அறமிதென்றும் யாம் மறமிதென்றும்
அறிகிலாத போது — தமிழ்
இறைவனாரின் திருக்குறளிலே ஒரு சொல்
இயம்பிக் காட்ட மாட்டாயா - கண்ணே
இயம்பிக் காட்ட மாட்டாயா?" (துன்பம்)

எனவே, இங்கே வள்ளுவனின் கருத்தை உங்கள் மனத்திலே சொல்லி

"வள்ளுவன் புகழ் வையகமெல்லாம்
வாரியிறையடா தமிழா - நீ
வாரியிறையடா தமிழா"

என்று என்றோ முப்பது ஆண்டுகளுக்கு முன்னுல் என் செவிகளிலிலே ஒலித்த பாடல் இருக்கிறதே, அதனைக் கொண்டு பார்க்கின்ற பொழுது இந்தத் தமிழ் வாழ வேண்டுமென்ருல், தமிழ்க் குமுதாயம் வாழ வேண்டுமென்று சொன்னுல் இந்தத் திருவள்ளுவத்தைக் காப்பாற்றியாக வேண்டும். நீங்களெல்லாம் படித்துச் சிலை திறந்து பயனில்லை. அதன் படியே நடந்து காண்பிக்க வேண்டும். நடந்து தெற்கே இருக்கின்ற நண்பர்களுக்கு நம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டுமென்று உங்களை வேண்டிக் கொண்டு,

"தாயின்மேல் ஆணை
தந்தைமேல் ஆணை
தமிழகம் மேல் ஆணை -
தூய என் தமிழ்மேல்
நான்ஆணையிட்டே தோழரே உரைக்கின்றேன்.
நாயினும் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார்
நலிவதை நாம் கண்டும் - ஓய்தலின்றி
அவர் நலம் எண்ணி உழைத்திட நான்
மறவேன்"

சென்னை, திருவாட்டி - தாமரை பெருஞ்சித்திரனுர் :

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" என்ற குறள்

வள்ளுவருடைய குரல். அந்தக் குறளுக்கு எடுத்துக்

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க)

# செய்தியிதழ்கள் உண்மையாக நடப்பதில்லை!

## இந்திராகாந்தியின் சாம்பல், . .

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)

மன்றவழக்கறையில் நெருக்கியடித்துக்கொண்டு, கூட்டமாகக் குழுமியிருந்தனர். வழக்குமன்றத்தையே ஒரு பரபரப்புக்கும், வியப்புக்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாக்கிய இவ்வழக்கில், பாவலரேறு அவர்கள் தாமே நடுவர் முன் நேர் நின்று உரத்த குரலில் வழக்காடியது, பார்வையாளர்களுக்குப் பெரும் புதுமையையும் உணர்வையும் ஊட்டியது.

உயர்நெறிமன்ற வரலாற்றிலேயே இந்நிகழ்ச்சி ஒரு சிறப்பான நிகழ்ச்சியாக இருந்தது என்று அவ்வழக்கைக் கேட்டிருந்த அனைவரும் வியந்து கூறினர்.

தந்தை பெரியார் அவர்கள் தாம் இவ்வாறு உயர் நெறி வழக்குமன்றத்தில் தமிழில் தம் முறையீட்டை எடுத்துச் சொன்னவர். ஆனால், அதற்குப் பின்னர் பாவலரேறு அவர்களே முதன்முறையாகத் தம் வழக்கைத் தூய இனிய தமிழில் எடுத்துச் சொன்னவர் ஆகிறார். அவரின் இந்தச் செயலை ஆங்கில இதழான 'இந்தியன் எக்சுபிரசு' கீழ்வருமாறு எழுதியிருந்தது.

"Petitioner Perunchithiranar, a Tamil scholar, President of 'Ulaga Thamizhina Munnetra Kazhagam" and editor of 'Thenmozhi', appeared in person and argued in chaste Tamil before the judge".

தி.மு.க. இதழான முரசொலி இவ்வாறு கூறியது: "தமிழறிஞரான பெருஞ்சித்திரனார் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி, தமது வழக்கைத் தெள்ளிய தமிழில் தாமே எடுத்துரைத்தார்."

பெருஞ்சித்திரனார் உயர்நெறி வழக்குமன்றத்தில் நடுவர் முன் தம் முறையீட்டை எடுத்து வைத்து உரையாற்றிய விளக்கம் வருமாறு:

"பெருமை மிகு தமிழ்நாட்டின், சிறப்புடைய உயர்நெறி மன்றத்தின் மாண்புமிகு நடுவர் அவர்களே!

அறிவியலும் மாந்த உரிமைகளும் வளர்ந்து வருகின்ற முன்னேற்றமான ஒரு காலகட்டத்தில் நாம் அனைவரும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இப்பொழுது, தங்கள் முன்னிலையில் நான் கொணர்ந்திருக்கும் வழக்கு யாரும் சற்றும் எதிர்பாராத, எல்லாரும் அதிர்ச்சியடையத்தக்க, சிலர் வருந்துவதற்குரிய, ஆனால், கட்டாயம் ஆராயத்தக்க தேவையான ஒரு வழக்காகும்.

அண்மையில் காலஞ்சென்ற மதிப்பிற்குரிய இந்தியாவின் தலைமையமைச்சர் திருவாட்டி இந்திரா காந்தி அவர்களின் 'அஸ்தி' எனப்படும் உடலெலும்புச் சாம்பலைப் பற்றியதாகும் இவ்வழக்கு.

அவரின் சாம்பல் பற்றிய வழக்கு இதுவென்பதால், அவருக்குரிய பெருமையைத் தாழ்த்தியோ, இழித்தோ கூறுவதாக யாரும் பொருள் கொண்டு விடத் தேவையில்லை. அவர் இந்நாட்டின் தலைமையமைச்சர் என்பதிலும், பொறுப்பு வாய்ந்த ஒரு பணியை ஆற்றி மறைந்து போயிருக்கிறார் என்பதிலும் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அதற்குரிய வகையில் அவருக்கென்று சில பெருமைகள் உண்டு.

ஆனால் அவரின் 'அஸ்தி' என்று கூறப்படும் உடலெலும்புச் சாம்பல், அறிவியல் தகுதியில் மற்ற பொருள்களின் சாம்பலைப் போன்றதே ஆகும். அதற்கு ஏதேனும் தனிச்சிறப்போ, தனிக் குணநலன்களோ, பெருமைக்குரிய தன்மைகளோ இருப்பதாக, அறிவியல் முறையில் எந்த ஓர் அறிவியல் அறிஞரும் (விஞ்ஞானியும்) ஆராய்ந்து கூறிவிட முடியாது.

வெறும் மத நம்பிக்கையில், பொதுமக்கள் கருதுமாறு, ஓர் உயர்ந்த மாந்தரின் சாம்பல் அது என்கிற பெருமை தவிர, அதற்கென்று தனிப்பெருமை வேறு இருப்பதாக யாரும் கூற இயலாது.

ஆனால், நம் இந்திய அரசு மதச்சார்பற்ற அரசு என்று கூறிக்கொண்டு, இந்து மதத்தினர் மட்டுமே, பெருமையாக ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் கருதிக் கொண்டிருக்கும் ஒரு மத நம்பிக்கைச் செயலுக்கு இவ்வளவு பெருமையும் மதிப்பும் (மரியாதையும்), இன்னும் விளக்கமாகச் சொல்வதானால், ஒரு தெய்வத்தன்மையும் கூறி, அதற்குப் பாதுகாவல் முறையில், ஏராளமான காவலர்களையும், படைத்துறையினரையும் கொண்டு, மக்களின் வரிப் பணத்தைச் செலவழிப்பதும், பொதுமக்களுக்கு ஒரு நம்பிக்கையை வரவழைத்து, அவர்களை மத மூட நம்பிக்கையில் ஆழ்த்துவதும், இந்தியா போலும் ஏழ்மையும் கல்லாமையும் அறியாமையும் மூட நம்பிக்கையும் நிறைந்திருக்கும் ஒரு நாட்டிற்கும், அந்த நாட்டை ஆளுகின்ற அரசுக்கும் உகந்த செயல்கள் அல்ல.

இது போன்ற செயல்களால், அரசியல் அதிகாரம் பெற்ற ஆளுங்கட்சிக்குத்தான், அரசியல் முறையில், பொதுமக்களிடம் விளம்பரம் பெறுகின்ற வகையில், ஊதியமே தவிர, பொதுமக்களுக்கு இதனால் எந்த வகையான ஊதியமோ நலமோ துளியும் இல்லை.

இதுபோன்ற செயல்கள் மத'வாதி'களுக்கும், மத நம்பிக்கையின் அடிப்படையில், பொதுமக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் போலி மடத்தலைவர்களுக்கும், 'சந்நியாசி'களுக்கும், மத நிறுவனங்களுக்கும் பொருந்தலாமே தவிர, 70 கோடி மக்களை ஆளுகின்ற இந்திய அரசுக்கோ, 5 கோடி மக்களை ஆளும் தமிழக அரசுக்கோ உகந்ததன்று; செய்யக் கூடிய செயலும் அன்று.

மேலும், இந்திரா காந்தியின் மேல் மக்கள் பேரன்பு கொண்ட காரணத்தால், அரசே முன் நின்று செய்யும் இது போன்ற மூட நம்பிக்கை நிறைந்த ஏமாற்றுச் செயலுக்கு, மக்கள் ஆதரவு தரவே செய்வர். கவர்ச்சியான, மத அடிப்படையில செய்யும் எந்தச் செயலுக்கும் மக்கள் வரவேற்பு இருக்கவே செய்யும்.

ஆனால், மக்கள் விரும்புகிறார்கள், அல்லது வரவேற்கிறார்கள், அல்லது பெரும் அளவில் ஆதரிக்கிறார்கள் என்பதாலேயே, ஒரு செயலைச் செய்யக் கூடியதாக, சரியானதாக, மக்களுக்கு நலம் விளைவிப்பதாக, அவர்களுக்குத் தேவையானதாக, அறிவியல் சார்ந்ததாக அரசு கருதி விடக் கூடாது. மூடநம்பிக்கைகளை அரசு ஊக்கக்கூடாது. அவ்வாறு அரசே செய்யுமானால், அதை அறமன்றந்தான் தடுத்து நிறுத்த வேண்டும்."

**இவ்விடத்தில் நடுவர் மாண்புமிகு நடராசன் அவர்கள் குறுக்கிட்டு பெருஞ்சித்திரனார் அவர்களை, 'இதை எந்த அடிப்படைச் சட்டத்தின்கீழ் கூறுகிறீர்கள்?' என்று கேட்டார்.**

**அதற்கு அவர், "நான் இந்த நாட்டின் குடிமகன். அரசுக்கு மற்றவர்களைப் போலவே வரி செலுத்துகின்றேன் இந்திய அரசின் அமைப்பியல் சட்டத்தில 51(A) பிரிவு, குடிமக்களின் உரிமைகளைக் கூறிக் கடமைகளை வலியுறுத்துகிறது. அதில் H பிரிவில், இந்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனும், அறிவியல் முறையான அணுகுமுறை, மாந்த நேயத் தன்மை மற்றும் ஆராய்வு ஊக்கம், சீர்திருத்தம் ஆகியவற்றை வளர்ப்பதற்கும் காப்பதற்கும் ஆவன செய்வதைத் தன் கடமையாக எடுத்துக் கொள்ள வேண்டும்' என்று கூறுகிறது. எனவே அச்சட்டப் பிரிவு கொடுத்த உரிமையில் நான் அரசின் செயலை அறிவியலுணர்வுடன் அணுகித் தவறென்று கூறக் கடமைப் பட்டுள்ளேன்" என்றார்.**

**அதற்கு நடுவர், "அறமன்றம் பொதுமக்களின் மூட நம்பிக்கைகளைத் தடுத்து நிறுத்த முடியாதே! அதை வழக்காளர் போன்ற பொதுநலம் நாடுபவர்கள் தாம் பொதுமக்களிடம் சென்று அறிவுக் கருத்துகளைப் பரப்ப வேண்டும்" என்றார்.**

**அதற்கு விடையாக, பாவலரேறு, "அந்த வேலையை நாங்கள் செய்து கொண்டுதான் இருக்கிறோம். ஆனால், அரசே இத்தகைய மூடநம்பிக்கைகளை வளர்க்கின்ற செயல்களில் ஈடுபட்டால், நாங்கள் என்ன செய்வது? ஆகவே தான், வேறுவழியில்லாமல் அறமன்றங்களின் உதவியை நாங்கள் நாட வேண்டி உள்ளது" என்று கூறி, மேலும் தொடர்ந்து தம் வழக்குத் தொடர்பான உட்கூறுகளை கீழ்வருமாறு எடுத்துரைத்தார்:**

**"இந்திரா காந்தியின் மேல், மக்கள் பேரன்பு கொண்ட காரணத்தால், அந்த அன்பை, இரக்கத்தைத் தனக்குச் சார்பாகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், அரசு தானே முன்வந்து, திட்டமிட்டு, மக்களின் வரிப் பணத்தில், ஏராளமான பொருட் செலவில் செய்யும் தேவையற்ற, இதுபோன்ற மூட நம்பிக்கை நிறைந்த ஏமாற்றுச் செயலுக்கு, மக்களும் ஆதரவு தரவே செய்வர். அது ஒன்றும் வியப்பில்லை. இப்படி நம்பிக்கை கொண்ட மக்களை மேலும் மதத்தின் அடிப்படையில் ஏமாற்றுவது எளிது. ஆனால் இவ்வாறு எளிதாக மக்களின் மதவுணர்வுகளைப் பயன்படுத்தி, ஏமாற்றும் படியான செயலை அரசே செய்யக் கூ[illegible] என்பதுதான் நம் கருத்து.**

**மேலும், இந்தச் சாம்பலை, அதைச் சார்ந்தவர்களோ, அல்லது தொடர்பான ஒரு மத நிறுவனமோ தங்கள் செலவில், ஊர் ஊராக எடுத்துச் சென்று, மக்களின் பார்வைக்கோ, வழிபாட்டுக்கோ வைப்பதானால் நமக்குத் தடையோ, வருத்தமோ இல்லை. ஆனால் அரசே இச்செயலை மக்களின் வரிப்பணத்தில் செய்யக் கூடாது என்பதாலேயே, அறமன்றத்தை நாம் இதைத் தடுத்து நிறுத்தக் கோருகிறோம்.**

**மதச் செயல்கள் அதிகார முறையில், அல்லது அதிகாரத்தின் பாதுகாப்பில் செய்யும் பொழுது, அவற்றால் மக்கள் ஏமாறவே செய்வர். இதனால், மக்களின் அன்றாட வேலைகளுக்குத் தடைநேர்கின்றன. அவர்களின் வரிப்பணம் பாழாகிறது. மேலும் ஏற்கனவே பல மூடநம்பிக்கைகள் நிறைந்த நாட்டில் மேலும் இதுபோலும் புதிய மூடத்தனங்கள் வளர்வதற்கும் அவற்றால் மக்களை ஏமாற்றுவதற்கும் இது ஒரு வழியாகவும் மக்களில் சிலரால், பின்பற்றப் படக்கூடும் என்றும் அஞ்சுகிறோம்.**

**மேலும் இதுபோலும் முறைகளை, இனிவரும்** காலத்தில் பிற அரசியல் கட்சித் தலைவர்களும் கடைப்பிடித்து மக்களை மேலும் மேலும் மூட நம்பிக்கைகளில் ஆழ்த்தவும் ஏமாற்றவுமே செய்வர். அதற்கிது ஒரு தவறான எடுத்துக் காட்டாகவும் ஆகிவிடலாம் என்றும் கருதுகிறோம்.

எனவே இச்செயலை உடனடியாக அறமன்றம் தடுத்து நிறுத்தி, மக்களுக்கு நலம் ஏற்படுமாறு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்" என்று கூறி முடித்தார்கள்.

பாவலரேறு அவர்கள் வழக்கைக் கூறி முடித்து வழக்கு மன்றத்தை விட்டு வெளியேறி வருகையில் இரண்டு வழக்கறிஞர்கள் பின்தொடர்ந்து வந்து, "தாங்கள் இருவரும் கருப்புக்குப்பாயம் (கோட்) அணிந்திருப்பதாகவும், இல்லெனில் அவரைக்கொலை செய்து விடுவோம்" என்றும் 'நாட்டுமக்கள் எல்லாம், அதைப்பற்றி ஒன்றுமே கூறாதிருக்கையில் உங்களுக்கு மட்டும் என்ன வந்து விட்டது' என்றும் அச்சுறுத்திப் பேசியதுடன் பாவலரேறு அவர்களுடன் வந்த வழக்கறிஞர் திரு பி.வி. பக்தவத்சலம் அவர்களிடம் 'நீங்கள் போய் இவருக்காகத் துணை நிற்கிறீர்களே. இது சரியா. உங்களுக்காக இவரை விடுகிறோம்' என்றும் கூறினார்கள்.

இந்தப் பெரும் பணியில் பாவலரேறு அவர்களுக்குத் துணையாக இருந்த வழக்கறிஞர்கள் மதிப்பிற்குரிய பி.வி. பக்தவச்சலம் அவர்களும், திரு. தென்னன் அவர்களும் ஆவார்கள். வழக்கு 12-11-84-இல் தள்ளுபடி செய்யப்பட்டது.

அடுத்த இதழில் இவ்வழக்கைத் தள்ளுபடி செய்து நடுவர் வழங்கிய தீர்ப்பும், மேல் மன்ற முறையீட்டுச் செய்திகளும் விரிவாக வெளிவரும்

---

## எழிலகம் திறப்பு விழா

கடந்த 31-10 84 அறிவன் கிழமை காலை 7-00 மணி அளவில் (தெ. ஆ.) மாவட்டம், கள்ளக்குறிச்சிக்கு அருகில் இருக்கும் மோ வன்னஞ்சூர் என்னும் சிற்றூரில் திரு பா. செகதீசன் திருவாட்டி சுசீலா அவர்களது 'எழிலகம்'' - திறப்பு விழா தொடங்கியது.

திரு பா. செகதீசன் அவர்கள் விழாவைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையேற்று நடத்தித் தர முன்மொழிந்தார். திரு செ வ. புகழேந்தி வழிமொழிந்தார்.

பாவலரேறு அவர்கள் தலைமையில் திரு. சு. அருணாசலம் அவர்கள் எழிலகத்தைத் திறந்து வைத்தார்.

செந்தமிழ் வல்லுநர் புலவர் திரு செ வரதராசனார் அவர்கள் தம் வரவேற்புரையில் அச்சிற்றூர் மக்களுக்குப் பாவலரேறு அவர்களின் உண்மைத் தமிழ்த் தொண்டினைக் கூறி அறிமுகப் படுத்தினார்கள். திராவிடர்க்கழகத் துணைப் பொதுச் செயலாளர் திரு கோ. சாமிதுரை அவர்கள் பாவலரேறு அவர்கள் தமிழுக்கு ஆற்றி வரும் தொண்டு பற்றிக் கூறியும், இலங்கைச் சிக்கலை விளக்கியும் கூறினார். திரு சோ. பச்சையப்பன் அவர்கள் திரு பா. செகதீசன் அவர்களது தந்தையார் பார்த்தசாரதி அவர்களது உருவப்படத்தினைத் திறந்து வைத்து ஐயாவின் நாட்டு நலத் தொண்டினைக் கூறியும், திரு பார்த்தசாரதி அவர்களோடு தமக்கு இருந்த தொடர்பையும் அன்பையும் எடுத்துரைத்தார்.

சட்டப் பேரவை உறுப்பினர் திரு சு. சிவராமன் அவர்கள் ஐயா அவர்களைப் பற்றியும், கூறி, திரு. பா. செ தீசன் அவர்களது குடும்பச் சூழலையும், கூறி உரையாற்றினார்.

திரு க வெங்கடபதி, திரு ப. நல்லாப்(பிள்ளை) திரு ந மணி. திரு பெ. சண்முகம் ஆகியோர் வந்திருந்து சிறப்பு செய்தனர்.

இறுதியாகப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் சிறந்ததொரு நீண்ட உரையாற்றினார்கள். வேறு எங்கும் கிடைக்காத சிறந்த, கருத்துகளை, எடுத்து வைத்தார்கள். இல்லம், அகம், மனை, வீடு - என்ற சொற்களுக்கான விளக்கங்களைக் கூறினார்கள் 'துச்சில்' என்பது வாடகை வீடு என்றும் 'புக்கில்' என்பது சொந்த வீடு என்றும் விளக்கிக் கூறினார்.

(தொடர்ச்சி 6- ஆம் பக்கம் பார்க்க)

---

### நன்றியறிவிப்பு

**பாவலரேறு அவர்கள் கடந்த 31.10.84 அன்று, கள்ளக் குறிச்சியில், மேலே கூறப்பெற்ற புதுமனை புகு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நாளிலேயே இந்தியத் தலைமையமைச்சர் திருவாட்டி. இந்திரா காந்தியவர்களின் மறைவு நேர்ந்ததால், போக்குவரத்துத் தடைப்படவே, அவர்கள் 4-11-84 வரை அவ்வூரிலேயே தங்க நேர்ந்தது. அக்கால், தெ.ஆ. தெற்கு மாவட்ட உ.த.மு.க. அமைப்பாளர் திரு. செ வ. புகழேந்தி அவர்களின் தந்தையாரும், திருக்குறள் அறிஞரும் ஆகிய புலவர் திரு. செ. வரதராசனார் அவர்களின் வீட்டில் தங்க வேண்டியிருந்தது. அதுபோது, புலவர் அவர்களும் புகழேந்தி அவர்களும் மற்றும் குடும்பத்தினரும் ஆசிரியரைப் புரந்து விருந்துபேணி ஐந்து நாட்களும் பேரன்புடன் பராமரிப்புச் செய்தார்கள். அவர்கள் அனைவர்க்கும் ஆசிரியர் தம் நெஞ்சுநிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.**

**— அமைச்சர்.**

# தமிழின விடுதலை ஒன்றே இறுதித் தீர்வு!

— கரடிப்பட்டி. க. கண்ணன். —

**முகவுரை :-** தமிழின வரலாறே மாந்த இன வரலாறாக மலர்ச்சியுற்று இருக்கின்றது இன்று இந்தியப் பெருங்கடலில் அமிழ்ந்துள்ள, குமரிக் கண்ட நிலப்பரப்பில் (படிநிலை வளர்ச்சியில்) தோன்றிய மாந்தர்களே இவ்வுலகில் பல்வேறு இடங்களுக்கும் பரவி, சிறு சிறு கூட்டங்களாகவும் குழுக்களாகவும், பின்னர் இனங்களாகவும் மாறி இன்றைய நிலையை அடைந்தனர். உண்மை வரலாறு இவ்வாறு இருந்தும், காரறிவும் சூழ்ச்சித்திறனும் மிக்க சிறு கூட்டமாகிய ஆரியப் பார்ப்பனர்களாலும், பார்ப்பன அடிமைகளாலும் ஏறத்தாழ கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக வரலாறே மறைக்கப்பட்டும் மாற்றப்பட்டும் வந்துள்ளது. இங்கிருந்து சென்ற பல்வேறு நாட்டினங்கள் விடுதலை வேட்கை கொண்டு, போராடி உரிமை பெற்றுக்கொண்டும் முன்னேறிக்கொண்டும் வரும் நிலையில், கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தகுடி என்றும், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றும், தம்முடைய பழமையையும் பரந்த நோக்கத்தையும் பறைசாற்றிக் கொண்ட தமிழினம், இன்று ஏன் கூனிக் குறுகி விலங்குகளைப்போல் அடிமையாய் இத்தனை ஆண்டுகள் வாழ்கின்றது என்பதை ஒவ்வொரு தமிழனும் சிந்திக்கக்கூடிய காலம் வந்துவிட்டது. தமிழினத்தின் வீழ்ச்சிக்குரிய கரணியத்தையும் மீட்சிக்குரிய வழியையும் அறிந்து செயலாற்ற இளைய தலைமுறையே அணியமாக வேண்டும்.

**மயக்கக் கருத்தாளர்கள் யார்? :** உலக ஒற்றுமை, இந்திய ஒன்றுமை, பாட்டாளி வருக்க ஒற்றுமை என்று பேசிக்கொண்டு, தங்களுக்குள்ளேயே பல்வேறு குழுக்களாகப் பிரிந்து இயங்கும் பொதுவுடைமைக் கொள்கையினர் தமிழக மக்களைத் திசைதிருப்பிக் கொண்டுள்ளனர். அவ்வாறே இந்திய தேசியங்களாகிய பெருநிலவுடைமையரும், பெரும் முதலாளிகளும், மதவெறியரும் கைநூல் சட்டையைப் போட்டுக் கொண்டும், காந்தியின் பெயரைச் சொல்லிக் கொண்டும் மக்களைக் கொள்ளை அடித்துக் கொண்டுள்ளனர். ஆனால் திராவிட இயக்கங்களின் தலைவர்களும் மக்களை ஏமாற்றிக்கொண்டே இருப்பதுதான் நம்மை வருந்தச் செய்கின்றது. ஏனெனில், திராவிட இயக்கத்தினர் குமுகாயச் சீர்திருத்தக்காரர்களாகவும், மொழிப்பற்று, இனப்பற்று மிக்கவர்களாகவும் தங்களைக் காட்டிக் கொண்டதால், தமிழினத்தின் அடக்கி ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்கள் இவர்களிடம் ஏமாறினர். இன்று, இறந்த தலைவர்களின் பெயர்களைச் சொல்லிக் கொண்டும், தங்களுடைய பிறந்தநாள் விழா, வெளிநாட்டுச் செலவு வழியனுப்பு விழா, வரவேற்பு விழா மற்றும் பல்வேறு விழாக்களுக்காகத் தங்களை நம்பிய ஏழை எளிய மக்களிடம் பணத்தை உறிஞ்சி ஆரவார வாழ்க்கை வாழ்ந்து கொண்டும் உள்ளனர். இன்று திராவிட மொழிகளும் இனங்களும் தனித்தனித் தேசிய மொழிகளாகவும் இனங்களாகவும் முழுவடிவம் பெற்றுவிட்ட பிறகும், குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டுவதைப்போல் 'திராவிடங்கள், தமிழ்நாட்டிற்குள்ளேயே உலாவந்து கொண்டிருந்தாலும் 'திராவிடம்' பேசி மக்களை மயக்கிக் கொண்டுள்ளனர். உண்மையாகவே தமிழ் மொழிப்பற்றும்தமிழினப்பற்றும்கொண்டுஉழைப்பவர்களைத் தங்கள் செய்தி இதழ்களில் வெளிப்படுத்தாமல் மறைப்பதிலிருந்தே இவர்களின் கரவான மொழிப்பற்றையும் இனப்பற்றையும் புரிந்து கொள்ளலாம். காலமே இவர்களின் உண்மையான உருவங்களை வெளிப்படுத்தும்.

தங்களுடைய சாதி வட்டத்தைவிட்டே வெளியே வர முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் மக்களைப் பார்த்துத் திராவிடத்தைப்பார்! இந்திய தேசியத்தைக் கண்டு களிப்பெய்து! உலகத்தைப் பார்த்து உன் வறுமையைப் போக்கு! என்று மக்களை மயக்கிக் கொள்ளையடித்ததேநம்முடையஒப்போலைப்பொறுக்கிக் கட்சிகளின் தொண்டாக (!) இருந்திருக்கின்றது. பல நூற்றாண்டுகளாக கல்வி அறிவு பெறமுடியாமலும், பல்வேறு சாதிகளாகவும், மதங்களாகவும் பிரித்து அவர்களுக்குள்ளேயே ஒருவரோடு ஒருவர் மோதவிட்டு அழுத்தப்பட்ட மக்களுக்கு உண்மையைக் கூறாமல், தாங்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவும் கொள்ளை அடிப்பதற்காகவுமே வெற்றுச்சொல் ஆரவாரங்களில் மக்களை ஏமாற்றினர். இந்த உண்மைகளையெல்லாம் இன்று மாந்தநேயமும், தாய்மொழிப் பற்றும், தன் இனப்பற்றும் மிக்க இளைய தலைமுறை சிறிது சிறிதாக உணர்ந்து கொண்டுதான் வருகிறது. இவர்களின் எண்ணிக்கை அதிகமாகும்போது இன்று தமிழர் தலைவர்களாகவும் தமிழினத் தளபதிகளாகவும் புரட்டுத் தலைவர்களாகவும் இலக்கியச் செல்வர்களாகவும் மாவீரர்களாகவும் வேடமிட்டுள்ள இவர்களின் உண்மை உருவங்கள் மக்களின் முன் வெளிப்படுத்திக் காண்பிக்கப்படும்

**தமிழீழ மக்களின் எழுச்சி :** தமிழினம் பல்வேறு கூறுகளாகப் பிரிந்து, சிதைந்து வேற்றினத்திற்கு அடிமையாகி அழிந்து விடுமோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தவர்களுக்குத், தமிழீழப் புலிகளின் முழக்கம் ஒரு புதிய எழுச்சியைத் தோற்றுவித்துள்ளது. இந்தத் தமிழீழ எழுச்சியிலிருந்து நாம் படிப்பினை பெறவில்லையென்றால் எப்பொழுதும் நாம் அடிமையாகவே இருக்க வேண்டியதுதான். சாதி, மத உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு தங்கள் இனம் உரிமையோடு வாழவேண்டுமென்ற ஒரே குறிக்கோளுக்காக நாள்தோறும் விடுதலைப் போராளிகள் செத்துக் கொண்டிருக்கும்போது, அங்கு அமிர்தலிங்கம் குழுமம் என்ன செய்து கொண்டிருக்கின்றது என்பதை இங்குள்ள இளைஞர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் அங்குள்ள அமிர்தலிங்கம் போன்றவர்களே இங்குள்ள தேசியங்களும், திராவிடங்களும். தங்களுடைய நலன் தாக்குண்ணப்படும், தலைமை கீழிறக்கப்படும் என்னும் கரணியத்திற்காகவே தமிழீழ விடுதலைக்கு அதிக விலை கொடுக்க வேண்டியுள்ளது தங்களுடைய இழந்த சாய்காலை மக்களிடமிருந்து மீண்டும் பெற்றுக் கொள்ளவும், அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளவுமே இங்குள்ள தலைவர்கள் தமிழீழப் படுகொலைகளை வைத்து அவல நாடகம் நடித்தனர். இப்பொழுது தேர்தலுக்காகத் தங்கள் நாடகத்தில் தமிழீழ நிகழ்ச்சியை ஒரு காட்சியாக வைத்து மிகத்திறமையாக எல்லாத் தேசியங்களும் திராவிடங்களும் நடிப்பார்கள். ஏனெனில், எத்தனைத் தேசியங்கள் எத்தனைத் திராவிடங்கள் என்பதை கணக்கு எடுக்க முடியாதல்லவா? ஓ! தமிழீழப் போராளிகளே! உங்கள் உறுப்புகள் சிதைக்கப்படும் போதும், உங்கள் அரத்தம் கடலிலே பாய்ச்சப் படும் போதும், இங்கு நாங்கள் சிறிது சிறிதாக செத்துக் கொண்டிருக்கின்றோம். ஏனெனில், எங்கள் சிந்தனையில் மட்டுமன்று, உடல் முழுதுமே விலங்கை மாட்டி வைத்துள்ளனர். விலங்கிட்டவர்கள் வேற்றினத்தவர்கள் மட்டுமல்லர்; நம்முடைய தலைவர்களுந்தாம்! உழைக்கும் மக்களாகிய எங்களை ஓட்டாண்டியாக்கி விட்டு, உங்களை மீட்க அவர்கள் டெல்லிக்கும் அமெரிக்காவிற்கும் பறந்து கொண்டிருக்கின்றனர். முதலில் தங்களை விடுவித்துக் கொள்ளாதவர்கள் எங்ஙனம் உங்களை விடுவிப்பார்கள் என்பதை எண்ணிப்பாருங்கள்!

**உழைக்கும் மக்களின் எழுச்சி :-** பல நூற்றாண்டுகளாக அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழினம் தந்தை பெரியாருக்குப் பின் ஓரளவு விழிப்புற்றது. இளைய தலைமுறையைச் சரியான வழியில் செலுத்தாமல், தலைவர்களுக்கு ஏதம் உண்டாக்காத சிறு சிறு போராட்டங்களிலேயே தலைவர்கள் இளைஞர்களின் உணர்ச்சியையும் உழைப்பையும் வீணடித்தார்கள்; வீணடிக்கிறார்கள். தங்களுடைய சாதி மத இழிவுகள் நீங்கும், பொருளியல் வளம் பெறுவோம் என்று நம்பிய உழைக்கும் மக்களைத் தேசியங்களும், திராவிடங்களும் ஏமாற்றிவிட்டனர். இதுவரை வந்த தலைவர்கள் எல்லாம் டெல்லிக்குச் சென்று பேரம் பேசுவதிலேயே காலத்தைக் கடத்திவிட்டனர். ஆகவே உழைக்கும் மக்களாகிய நாம் இனிமேலும் இத் 'தேசியங்கள்' 'திராவிடங்கள்' பின் செல்லுவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும். நமக்காக உண்மையாகவே உழைத்தும் வழிநடத்தியும் செல்லும் தலைவர்களை இனங்கண்டு கொள்ளுங்கள் தமிழீழப் போராளிகளின் இறுதி நிலைக்கு நாமும் வந்தால் ஒழிய நமக்கு விடிவில்லை. செங்குருதி சிந்தாமல் இங்கு எந்தவகை விளைவும் ஏற்படப்போவதில்லை. தமிழினம் சாதி, மத இழிவுகளும் பொருளியல் ஏற்றத்தாழ்வுமின்றி தன்னுரிமையோடு வாழவேண்டுமானால் தமிழக விடுதலை ஒன்றே இவற்றுக்கெல்லாம் வழிவகுக்கும். ஒட்டியவயிறோடும், ஒடுங்கிய கண்களோடும் நடைப் பிணமாய் உலவும் உழைக்கும் மக்களே! நாமே நம் விடுதலைக்கு வழிவகுக்க வேண்டும். சாதி மதச் சாக்கடைக்குள் விழாமலும் தேர்தல் என்னும் மாய வலைக்குள் மாட்டிக் கொள்ளாமலும் நாம் எல்லோரும் தமிழரே என்ற ஒரே உணர்வோடும், நோக்கோடும் போராடுவோம். வீழ்த்துவோம் பகைவரை! விடுவிப்போம் தமிழினத்தை! 8

## செய்திப் பொறி!

பொருள் அரசமைச்சர் பட்டாபிராமராவ் தென் பகுதி வரிஅதிகாரிகள் மாநாட்டில் பேசியபோது,

"வழக்குகள் போடப்பட்டுள்ளதால் உரு. 15,000 கோடி அளவு வரி திரட்டப்பட முடியாமல் உள்ளது" என்று கூறியிருக்கிறார்!

வழக்குப் போடுவதும்... வரிகட்டாமல் தவிர்ப்பதும் எளியவர் அல்லர். பெரும்புள்ளிகளே இக் கோடிகளை வைத்து விளையாடுபவர். இவர்கள் 'வரிகட்ட வேண்டிய' தேவையை அறியாதவர் 'அல்லர். இவர்கள் தாங்களாகவே கட்டமுன் வருவார்கள் என்று எதிர்பார்க்கிற இந்த அமைச்சரும், அரசும் ... எளியவர் கட்டாத' என்றேகால், இரண்டரை உருபா வரிக்குக் காட்டும் கெடுபிடியை இவர்களிடம் காட்ட முடியாது என்பதையே நாம் நடைமுறையில் பார்க்கிறோம்

— "படிப்பாளி" —

## இனமீட்கக் காண்போம்!

— கடலூர். மணிமாறன் —

அஞ்சுவதும் கெஞ்சுவதும் மாற்றானின்
அடிவருடித் தொழுது நாணித்
துஞ்சுவதும் தடைகள்வரின் சோர்வதுவும்
துவள்வதுவும் பெருமை யாமோ?
வெஞ்சிறையில் தள்ளிடினும் வெங்கொடுமை
விளைத்திடினும் புலிகள் போலும்
நஞ்சனையார் தனைநொறுக்கி நாடுமொழி
இனமீட்சி மலரக் காண்போம்!

அறிவிழந்து நிலைமறந்து பதவிக்கே
அங்காந்து மண்டியிட்டு
நெறியிழந்து பண்டிருந்த நெடும்புகழின்
நினைவிழந்து பொருளைச் சேர்க்கும்
வெறியுணர்வில் காலத்தை விளையாட்டாய்
வீணாக்கி உயிராய்க் கொண்ட
குறிக்கோளை இழப்பதுவோ? குலப்பிரிவால்
குமைவதுவோ? எண்ணிப் பாரீர்!

வெல்லரிய தமிழர்நலன் இனமானம்
வேரறுந்த மரமாய் வீழ
வல்லூறாய் வாய்த்துவிட்ட திரைப்படமும்
மதுக்குடியும் பரிசுச் சீட்டும்
நல்லுணர்வைச் சிதைத்துவிட நலிவுற்றோம்
நல்குரவே விஞ்சக் கண்டோம்!
பல்கிவரும் இனப்பதர்கள் பழிச்செயலால்
பார்வியந்த புகழி ழந்தோம்!

செய்தித்தாள் தொலைக்காட்சி வானொலிதம்
செயல்மறந்தே இற்றை நாளில்
பொய்யவிழ்த்துத் தமிழினத்தைப்
பொசுக்குவதில்
புதுவலிவைப் பெற்று நாட்டில்
உய்வறியாத் துயரிழைக்க அரசியலாம்
உளைச்சேற்றில் உழலு வோரும்
மெய்சிலிர்க்கும் விளம்பரத்தேர் உருட்டுகிறார்;
மேன்மையெலாம் தமக்கே கொண்டார்!

கொடு'தலை'யை என்றாலும் அணியம்யாம்
கொதித்தெழுவோம்; இனத்தின் நாட்டின்
விடுதலையே உயிர்மூச்சு வேறெதுவும்
பெரிதன்று; வேங்கைக் கூட்டம்
நடுநடுங்கிப் புறங்கொடுத்து நரிகளுக்கு
நாட்டாண்மை கொடுப்பதாமோ?
வடுவறியா வீரத்தின் வரலாற்றை
வையத்தில் புதுக்கு வோமே!

### அன்பர்கள் கவனிக்க....

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாலையில் 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

— அமைச்சர்.

# இளைஞர்களே! விடுதலைக்கு வாருங்கள்!

இப்பொழுதுள்ள சட்டங்களால்
ஏழைகள் நன்மைபெறவில்லை!

## சான்று அளிக்கிறார் நயன்மை அரசர்!

"இப்போதுள்ள நயன்முறையில் ஏழை எளியோருக்கு நயன்மையே (நீதியே) கிடைக்காது" என்று சொல்லியுள்ளார் மீமிசை மன்ற நயன்மையரசர் பி.என். பகவதி.

'எளியோரை கைதூக்கி விடுவதில் ஆட்சியாளர்களுக்கு எந்த ஆர்வமும் இல்லை. ஆளுமைத் துறைக்கோ இதில் அக்கறையே இல்லை. நயன்மைத் துறையினர் காலத்திற்கேற்ற குமுக உணர்வோடு சட்டங்களுக்கு விளக்கம் தர அணியமாக இல்லை. 'இந்த மூன்று 'கட்டத்' திட்டம்' மட்டுமே செயல்படுகிற ஒரு நாட்டில் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் நயன்மை எப்படிக் கிடைக்கும்?" என்று கேட்கிறார் நடுவர் பகவதி. 'சட்டங்களை இயற்றிவிட்டால் மட்டும் போதாது'. அவற்றை நடைமுறைப்படுத்தவும் வேண்டும். ஏழை-எளிய பின்தங்கிய மக்கள் தொகுதியினர் தங்களுக்குரிய உரிமைகளைப்பற்றி நன்கு தெரிந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளும் போராட்டங்களில் ஈடுபட்டால் தவிர இந்தச்சட்டங்களை முழுமையாகச் செயற்படுத்த இயலாது. இதற்கு முதற்படியாக, மக்களுக்கு சட்ட ஓர்மை ஏற்பட வேண்டும். அதாவது, அவர்களுக்காக நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்கள் என்னென்ன, அவற்றை நிறைவேற்றுவதால் அவர்களுக்கு ஏற்படக் கூடிய உரிமைகளும் நன்மைகளும் என்னென்ன என்பதை மக்கள் உணர்ந்து தெரிய வேண்டும். பொதுப்பணி நிறுவனங்கள் இந்த ஓர்மைத் தெளிவை மக்களிடம் பரப்பவே முயல வேண்டும்.

"ஏழைகளை உயர்த்துவதற்காக, அவர்களின் இன்னல்களைத் துடைப்பதற்காக என்று செய்யப்பட்டுள்ள சட்டங்கள் அதிகமாகவே உள்ளன. ஆனால், இன்று அத்தனை(பொதுநல சேமநல)ச் சட்டங்களும் ஏழைகளை நசுக்கவே பயன்படுகின்றன! இந்தப் போக்கை மாற்றும் வரையிலே, இங்கே குமுகாயப் பெருமாற்றம் எதையும் நாம் உண்டாக்கவே முடியாது.',

நயன்மை வழங்குவதையே அலுவலாகக் கொண்ட ஒருவர் இப்படிச் சொல்லுகிறார் என்றால், — அதுவும் பணி வாய்ப்பு அளிக்கவில்லை என்ற வாட்டத்திலோ, பணி பறிக்கப்பட்ட சினத்திலோ அல்ல, மீமிசை மன்றத்தில் (சுப்ரீம் கோர்ட்டில்) நயன்மையரசராக இருந்துகொண்டே இப்படிச் சொல்லுகிறார் என்றால், நமது ஆட்சியின் கையாலாகத்தனத்தை விளக்க வேறு சான்று வேண்டுமா? 'நாம் வழங்கிக்கொண்டு இருக்கிற நயன்மையால், எந்தக் குமுகாயப்பயனும் மாறுதலும் ஏற்படப் போவதில்லை' என்று நமது நயன்மையரசரே 'நற்சான்று' வழங்கிய பிறகும் நாம் 'வருகிறது வருகிறது நயன்மை' என்று வரவேற்பு இதழோடு காத்துக் கிடக்கிறோம் என்றால், நமது உடலத்தில் ஓடுகிற அரத்தம் குளிர்ந்த அரத்தமாக இருக்குமோ? ...

நன்றி: 'அறிவியக்கம்', சூன் 84
தமிழ்ப்படுத்தம்: தாரை-தமிழ்வென்றி.

## அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் 'ஐயை' உலா வருகின்றாள்!

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தம் சிறைக்காலங்களில் எழுதிய பாவியம் ஐயை. இது 1965-ஆம் ஆண்டு தென்மொழியில் வெளிவந்தது. இதன் கதைத்தலைவியாகிய ஐயையின் வாழ்க்கை அவலத்தில், தம் உள்ளத்தை நெகிழவிட்டனர் பலர், உருக்கத் துன்பம் உற்றனர் மிக மிகப் பலர். இதன் பொருட்டுப் பல பாடல்களும், திறனாய்வுகளும் எழுந்து, ஐயை தமிழ்ஆர்வலர் நெஞ்சில் நீங்கா இடத்தைப் பிடித்து நின்றனள்!

இப் பாவியநூல் ஏற்கனவே திருவையாறு புலவர் கல்லூரியில் இல.இ. (B.Litt.) மாணவர்களுக்கும், சென்னை இலயோலா கல்லூரி மாணவர்களுக்கும் தமிழ் க.இ. (B.A.) அறி.இ. (B.Sc.) வகுப்புகளுக்கும் பாடமாக வைக்கப் பெற்றுள்ளது.

இக்கால், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கீ.க.மொ.மு. (M.O.L.) மாணவர்களும் ஐயையைப் படிக்க வாய்ப்பேற்பட்டிருக்கிறது. அவர்களுக்கும் இந் நூல் பாடமாக ஆக்கப்பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

உ.த.மு.க. உறவுமடல்

## அரசியல் அரசியல் என்கிறார்களே அப்படி என்றால் என்ன?

செய்தி ஒலிபரப்பு அமைச்சர் எச். கே. எல். பகத். இவர்,

'இன்று செய்தியேடுகள் அரசியல் தொடர்பான செய்திகளுக்கும், நாட்டில் நடக்கும் குற்றங்களுக்குமே தனியிடம் தருகின்றன. நாட்டில் நடக்கும், குமுக, பொருளியல், பண்பாட்டு வளர்ச்சித் தொடர்பான செய்திகளுக்குத் தனியிடம் தரவேண்டும் — செய்தியேடுகள், மக்களுக்கு – குறிப்பாக நாட்டுப்புற மக்களின் சிக்கல்களை, — எதிரொலிக்க வேண்டும்' என்று வலியுறுத்தியுள்ளார். இதனை, 'செய்தியேடுகளில் அரசியல் அதிகம் இடம்பெறுவதா? அமைச்சர் எதிர்ப்பு' என்று 'தினமணி' செய்தி வெளியிட்டிருக்கிறது.

'அரசியல்', என்பது 'தவறான' கருத்துகளில் கையாளப்படுகிறது. அக் கருத்துகளைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்தலாம் என்று கருதுகிறேன்.

1 ஆளும் கட்சியை எதிர்ப்பது.
2 எதிர்க்கட்சிகளை ஒடுக்குவது
3 அரசு எந்திரங்களைக் குற்றஞ்சாட்டுவது.
4 தனிப்பட்டவர் குற்றங்களைப் பேசுவது.
5 விலையேற்றம், படுகொலை, ஏதங்களைப் (விபத்துகளைப்) பற்றிய கருத்து.
6 வழிச்செலவு (பயணம்), உணவு, உறவு, சந்திப்பு பற்றி எடுத்துரைப்பது.

இவற்றைத் 'தனித்தனியான நிலைமைகளாகப்' பார்த்து 'அரசியல்' இவை என்கின்றனர். இப்படிப்பட்ட 'அரசியல்' பேச்சுகளை 'அரசியல் காரணமன்று' என்று மறுத்துக் கூறுவதையும் பார்க்கிறோம்.

'அரசியல் எதில் இல்லை. அனைத்தும் அரசியலே' என்பதுதான் நம் கருத்து. ஆனால், இந்த அரசியல் 'யாரின் பொருட்டு?' என்ற வினாவினை நாம் எப்பொழுதும் விழிப்புடன் எழுப்பி வருகின்றோம்! காரணம் 'இருவேறு உலகத்தியற்கை', என்ற அறிவியல் பார்வை நமக்குளதாகும்!

அதேவேளை, அரசியல் என்பது 'மாற்று வகுப்பு' அரசியலை எதிர்த்து முறியடிப்பதில் கருத்தாயிருக்கும். இதிலிருந்து விலகி வேடிக்கை காட்டி மக்களை, ஏமாற்றும் 'அரசியல் பகடித்தனத்தை 'நாம் கண்டிக்க வேண்டியவர்களாக உள்ளோம்!

நாம் செய்தி ஏடுகளில் அரசியல் கூர்மை இல்லையே என்று கவலைப்படுகிறோம். இது மிக அதிகம் ஆதல் வேண்டும் என்றும் விரும்புகின்றோம். ஆயினும், வெறும் ஆரவாரங்களில் போய் முடியும் 'பொழுதுபோக்கு அரசியல்' கூடாது என்பதில் நாம் கடுமையாக இருத்தலும் வேண்டும்.

இழிவுகள் – பூசல்கள் ஏமாற்று மூன்றும் இல்லாத 'அரசியலை'த் 'தமிழ்நிலம்' முன்வைத்துள்ளது. இதற்கான காரணம், 'ஒரு சார்புடைய தமிழ்நலம் பேசும் அரசியலார்களின்' ஊடே நிலவும் இம்மூன்று நிலைமைகளை அருவருப்பாக நோக்குவதாலாகும்! நாம் 'எதிரிவகுப்பு' அரசியலை அடியோடு எதிர்ப்பவர்களே! இதில், 'மென்மை'க் கிடமில்லை!

— பறம்பை அறிவன்.


## "தென்மொழி"

சென்னை-5

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல்நாளன்று
வெளிவரும்

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் : | 15 உருபா | 35 உருபா | 45 உருபா |
| அரையாண்டுக் கட்டணம்: | 8 ,, | 18 ,, | 25 ,, |
| தனியிதழ் : | 1.25 ,, | 3 ,, | 4 ,, |

ஓரிதழுக்கு உருபா 2-50 பேணி முன்பணம்
கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக்கேட்க!


## மீனவர்களுக்கான கொடுமை தொடர்ந்தே நடைபெறுகிறது

மீன் பிடிக்கச் சென்ற ஏதுமறியா மீனவர்கள் தொண்ணூற்று மூன்று பேர்களைப் பிடித்துச் சென்று (17 விசை வல்லங்களுடன்) இப்போது அவர்களில் 17 வல்லங்களின் ஓட்டுநர்களின் மேல் வழக்குப் பதிவுசெய்து மற்றவரைத் திருப்பி அனுப்பி விடுவதாக அறிவித்துள்ளனர்.

இது நடப்பது இன்று நேற்றன்று; இரண்டாண்டு காலமாக இப்படிப் பிடிப்பதும், அவர்கள் பிடித்து வைத்துள்ள மீன்களைப் பறிப்பதோடு மட்டுமல்லாமல் துமுக்கிக் கட்டையால் அடித்துத் துன்புறுத்துவதும் ஏன் இவ்வாறு செய்கின்றீர்கள் எனத் திருப்பிக் கேட்டால் நுண்சிதைப்பதும் நடந்துதான் வருகின்றன விசை வல்லங்களின் உரிமையாளர்கள் அவ் வல்லங்களையும் வலைகளையும் இன்னும் திரும்பப் பெறமுடியவில்லை. இலங்கைக் கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்ட விசை வல்லங்களும் மீனவர்களும் எண்ணத் தொலையாது. உலகில் இன்று தமிழினத்தானின் உயிர்தான் மிக மலிவாக விலை போகிறது அவன்தான் மிக எளிதாகக் கொல்லப்படுகின்றான். தட்டிக் கேட்க ஆளில்லை. இல்லையென்றால் இரண்டாண்டுகள் இப்படி நடந்தும் இந்திய அரசு ஏனென்று கேட்காமல் இருக்குமா?

வடக்கில் இப்படி ஒரு நிலை இருக்கட்டும். இந்நேரம் என்ன என்ன குதி குதித்து உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்த எப்படியெல்லாம் நடந்திருக்கும் இதை இங்கிருந்து தேசியம் பேசும் திருடர்களும் தமிழ் தமிழ் என்று மக்களை ஏமாற்றித் திரியும் திராவிட இயக்கங்களும் மாற்று நடவடிக்கை எடுத்தார்கள் இல்லை. ஒருவரைப்பற்றி ஒருவர் நடுவணரசிடம் கோள் மூட்டுவதும், குறை நயப்பதும் நான் முந்தி நீ முந்தி ஆழ்வார் பட்டங்கள் வாங்குவதும் மக்களை ஆட்டு மந்தைகள் என எண்ணி நடத்துவதும்தானே நடக்கின்றது.

மீனவர்களோ, இனியும் ஏமாறப் போவதில்லை. நாளும் இறந்திறந்து பிழைப்பதை விட ஒன்றால் வெல்வோம் அன்றால் அழிவோம் என்னும் உறுதி பூண்டு போராட அணியமாகி விட்டனர்.

இன்றுவரை உறுதியுடன் இருக்கின்றனர். இதற்கிடையில் மாவட்ட ஆட்சித் தலைவர் பாசறையிட்டு அதனை ஒடுக்கித் தீர்த்து வைக்கும் பணியில் உள்ளார், பார்ப்போம்!

— அதியமான் நெடுமானஞ்சி.




'அண்ணா !'

'என்ன தம்பி ?'

'ஆரியமாயை என்று ஒரு நூல் எழுதியவரும் திராவிடர் முன்னேற்றத்திற்கென ஒரு கட்சியைத் தொடங்கியவரும் பேரறிஞர் அண்ணாதானே ?'

'ஆமாம்,'

'அண்ணா என்னும் அவருடைய பெயரையும் திராவிட என்னும் சொல்லையும் தாங்கியுள்ள ஒரு கட்சியின் கொள்கைகளைப் பரப்புவதற்கெனச் செயலாளராக அமர்த்தப்பட்டிருப்பவர் ஓர் ஆரியப் பெண்மணியாமே !'

'அப்படித்தான் சொல்லிக் கொள்கிறார்கள் !'

'அவ்வாறானால், அந்தக் கட்சியின் கொள்கைகளைப் பரப்புவதற்குத் திராவிடர் எவரும் அக்கட்சியில் இருக்கமாட்டார்களோ ? அல்லது, அந்தக் கட்சி ஆரியமாயையில் சிக்கிவிட்டிருக்குமோ? அல்லது ......

'எனக்குத் தெரியாது தம்பி !' 0

— தமிழவேள்.

# உரிமைபெற்ற தமிழ்நாட்டைக் காணுங்கள்!

(2-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

காட்டாக நாம் இன்று வள்ளுவப் பெருமகனுக்குச் சிலை வைத்து, அவரையே தெய்வமாக வணங்கும் காலமிது. இவ்வளவு பெரிய குறளை, இவ்வளவு பெரிய ஆற்றலை நம் மக்களுக்காக, நம் மக்கள் நன்றாக வாழவேண்டும். தனிவாழ்க்கையாகவும், இன (குமுகாய) வாழ்க்கையாகவும் வாழவேண்டுமென்ற அக்கறை கொண்டு அந்தக் காலத்தில் இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே இப்படிப்பட்ட புரட்சிகரமான நூலை எழுதியிருக்கின்ற அவர் எப்படி வாழ்ந்திருப்பாரென்று நாமே எண்ணிக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட மகன் தொல்லைப்பட்டுத்தான் எழுதியிருக்க வேண்டும். வாழாமல் மக்களுக்காக வாழ்ந்த பெருமகன் என்று எண்ணி நாம் அவரை இந்தக்காலத்தில் தெய்வமாகச் சிலைவைத்து வணங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்."

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் திரு முகுந்தன் :

"திருவள்ளுவர் சிலைத் திறப்புவிழாவிலே பங்குபெற்றுப் பேசக்கூடிய அருகதை எனக்கில்லையென்றாலும், ஈழத்திலே இருந்து கலந்து கொள்கின்ற வாய்ப்பு திருவள்ளுவர் சிலைக்கு உண்டு என்ற அடிப்படையிலும், திருக்குறளை ஏட்டுச் சுவடியிலிருந்து எழுத்து வடிவமாக மக்கள் மத்தியிலே கொண்டுவந்த பெருமதிப்புக்குரிய ஆறுமுக நாவலர் அவர்கள் பிறந்த அந்த மண்ணிலே நானும் பிறந்து விட்ட காரணத்தால் இந்த விழாவிலே பங்கேற்கலாமென்று ஒரு துணிவும் இந்த திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழாவிலே ஏதாவது ஒரு சிற்றுரை ஆற்றிவிட வேண்டுமென்ற எண்ணமும் எனக்கேற்பட்டது. திருவள்ளுவரின் சிலையை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். பக்கத்திலே இருக்கின்ற நாட்டைப் பற்றிக்கூட நீங்கள் நிறையக் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகக் கேட்டுக் கொண்டிருப்பீர்கள். ஏதோ இலங்கையிலிருக்கின்ற மக்கள், ஈழத்திலே வாழ்கின்ற மக்கள் இங்கிருந்து சென்று குடியேறியவர்களாக நீங்கள் — உங்களில் ஒரு சிலர் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இது முழுக்க முழுக்கத் தவறானதாகும். குமரிக்கோடு கொடுங்கடல் கொள்ளும் முன்னர் அந்தக் கொடுங்கடல் கொண்ட பொழுது எஞ்சிநின்ற ஒரு தீவாக-எஞ்சிநின்ற ஒரு நாடாகத் தமிழ் ஈழமும், அதைச் சுற்றிநின்ற இலங்கைத் தீவுமிருந்தது. இலங்கைத் தீவில் சரித்திரத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே தமிழர்கள் வாழ்ந்து வந்தார்கள். திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவிலே உங்களுடைய ஊர்திகள் வந்தன. அந்த ஊர்தியிலே சேரன் செங்குட்டுவன் கனக விசயனின் தோள்களிலே கல்லைச் சுமந்து வந்த காட்சியைக் கொண்டு வந்தீர்கள். அந்தக் கனக விசயன் தோள்களிலே கொண்டு வந்த கல்லைச் சேரன் செங்குட்டுவன் இங்கே கண்ணகிக்குச் சிலை வடித்தபொழுது அங்கே தமிழரசன் கண்ணகிக்கு வெண்கலத்திலே சிலை வைத்தான். இன்றும் அந்தச் சிலை பிரித்தானிய ஏகாதிபத்திய நாட்டிலே இலங்கையிலிருந்து களவாடப்பட்டுச் சென்று அங்கிருக்கின்ற ஆயுதத் துறையிலே வைக்கப் பட்டிருக்கின்றது. எனவே அந்தக்காலம் முதல் தமிழர்கள் அதற்கு முந்தின காலத்திலிருந்தே வாழ்ந்தார்கள் என்பதற்கு நிறைய ஆதாரங்கள் உண்டு. திருவள்ளுவர்க்கு நாங்கள் சிலை எடுத்திருக்கின்றோம். கண்ணகிக்கும் சிலை எடுத்திருக்கின்றோம் கண்ணகியையும் திருவள்ளுவரையும் வழிபட்டோமே தவிர, வெறுங்கல்லை எந்தக்காலத்திலும் எமது தமிழர்கள் வழிபட்டது கிடையாது. இங்கு நாம் வள்ளுவர்க்குச் சிலை வைக்கின்றோம். அங்கு நாங்கள் வள்ளுவர்க்கு வைத்த சிலைகள் உடைக்கப்பட்டு வீதிகளிலே வீசப்படுகின்றன. வள்ளுவர், சிலையாக இருந்தாலும், உடைக்கப் பட்டாலும் தமிழனுக்கு உணர்வையூட்டிக் கொண்டிருக்கிறாரென்பதை யாரும் மறந்து விடமுடியாது. இந்த அடிப்படையிலே அங்கிருக்கிற தமிழர்கள் இன்னல் படுகின்றார்கள். தமிழை நாங்கள் பேசியதனால், வள்ளுவன் தந்த தமிழை, வள்ளுவன் தந்த மொழியை நாங்கள் பேசியதனால், வள்ளுவன் தந்த மொழி உலக மனைத்துக்கும் பொதுமொழி என்று நாங்கள் மற்ற மொழிகளிலும் மொழி பெயர்த்து விட்டதனால் இன்று நாங்கள் அடிபடுகின்ற நிலைக்கு மாற்றப்பட்டோம்."

— (தொடரும்)

(3-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஒருவனை 'ஆண்' என்று சொல்லும்போது அவன் வீட்டிற்கும், நாட்டிற்கும் ஆளாக இருக்க வேண்டும், வீட்டில் அவன் மனைவி அவன் 'ஆண்' என்று கூறுதல் வேண்டும் அடுத்து அவனது நாட்டை அவனே ஆளும்பொழுதுதான் அவன் 'ஆண்' மகன் ஆகின்றான் எனக் குறிப்பிட்டார்.

தமிழன் முதலில் மொழியால் அடிமைப்பட்டுப், - பின் பண்பாட்டால் அடிமைப்பட்டு, அரசியலால் அடிமைப்பட்டுத் தற்போது முழு அடிமையாகி விட்டான். உலகில் பெரிய மொழிகள் நான்கைந்தே. அவற்றில் தமிழே முதன்மையானது. தமிழ்தான் 50,000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது எனக் குறிப்பிட்டார். நாம் தமிழர் என்பதை மறந்து, நான் இந்தச் சாதியைச் சேர்ந்தவன், நான் இந்த கட்சியைச் சேர்ந்தவன் என்கின்ற உணர்வே உள்ள நிலை மிகவும் வருந்துவதற்கு உரியது. தமிழ் மொழி உணர்வு ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். நல்ல தமிழில் பெயர் வைக்க வேண்டும் என்கின்ற உணர்வு குறைந்துள்ளது. இப்படியெல்லாம் இல்லாத நிலையில்தான் இலங்கையில் தமிழர்களை அடித்தும், கொலை செய்தும் கொண்டிருக்கையில் நாம் அமைதியாக இருந்து கொண்டிருக்கின்றோம். தமிழைப் பற்றிக் குறிப்பிட்டால், சமசுகிருதத்தைப்பற்றிப் பெருமையாகப் பேசிக்கொள்ள முடியாது என்ற நிலையில்தான் வெளிநாட்டுத் தூதுவரகங்களில் தமிழ்நாட்டைப்பற்றி எந்தச் செய்தியும் இல்லை. இவ்வாறாக பாவலரேறு அவர்கள் மிகப் பல நிலைகளிலும் உயர்ந்த இனமாகிய தமிழினம் வீழ்ந்து கிடக்கும் நிலை குறித்து ஏறத்தாழ 2 மணி நேரம் பலவாறாகக் குறிப்பிட்டார்கள்.

அச் சிற்றூர் மக்கள் ஐயாவின் பேச்சைக் கேட்டு மிகத் தெளிவான உண்மையான பேச்சு எனப் பாராட்டினர்.

திரு க. இளையாழ்வார் நன்றி கூறினார். 0

# திருமண நிகழ்வு

கடந்த 4-11-84 ஞாயிறு அன்று கள்ளக்குறிச்சிக்கு அருகில் இருக்கும் அரிய பெருமானூர் என்னும் சிற்றூரில் திரு முத்தியனார் அவர்களின் பெயரன் செல்வன் சி. இராசேந்திரன் அவர்களுக்கும் திரு சு. வேலாயுதம் அவர்களின் மகள் செல்வி விமலா அவர்களுக்கும் திருமணம் நடந்தது.

பாவலரேறு ஐயா அவர்கள் தலைமையேற்றுத் திருமணத்தை நிகழ்த்தி வைத்தார். முன்னதாக திரு சு. அருணாசலம் அவர்கள் வரவேற்பு நிகழ்த்தினார்கள்.

பாவலரேறு அவர்கள் பழங்கால திருமண நிலையை எடுத்துக் கூறினார். சிக்கனமாகவும், அறிவு முறைப்படியும் திருமணம் நடத்துவது சிறந்தது எனக் கூறினார். தந்தை பெரியார் அவர்கள்தாம் நம் தமிழினத்திற்குத் தொண்டு செய்ய முதலில் புறப்பட்டார். நமது மொழி தான் உலகில் மூத்த மொழி. உலக மொழி ஆராய்ச்சி அறிஞர்கள் தமிழ் மொழி தான் முன்பு தோன்றிய மொழி என கூறுகின்றார்கள். "Primary clasical Language" எனப் பாவாணர் அவர்கள் கூறியுள்ளார்கள்.

நமது மொழி போனதனால் நமது சிந்தனை குறைந்தது. எனவே பலர் நுழைந்து வஞ்சகர் நம்மை அழுத்தி, அடிமைப் படுத்தினார்கள். தங்களது சமசுகிருதத்தினால் 5000 ஆண்டுகளாக நம்மை அடிமைப் படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

நாம் இழந்த தன்மான உணர்வை, - மாந்த உணர்வை தந்தை பெரியார் அவர்கள்தாம் தோற்றுவித்தார்கள். தந்தை பெரியார்தாம் மாந்தனைப்பற்றி எண்ணிய முதல் பேராசிரியர். 2500 ஆண்டுகளாக மாந்தனைப்பற்றி எண்ணிச்செயல்பட யாரும் இல்லை.

அறிவியல் நமது நாட்டில்தான் முன்னேறாமல் இருக்கின்றது. வெளிநாடுகளில் மாணவர்களின் கல்வி முறை மிக உயர்ந்து இருக்கின்றது. முழுமையாகத் தொலைகாட்சி வழிக்கல்வி சுற்றுத் தரப்படுகின்றது. மின்னணு முறையில் கல்வி கற்றுத்தர இயலும். ஒரு பொறியில் தமிழ்மொழியில் உள்ள திருக்குறளை வைத்து பொத்தானை அழுத்தினால் உள்ளேயே மொழி பெயர்த்து, அச்சிடப்பட்டு, வேறு மொழியில் புத்தகமாக வெளிவரும்-அளவுக்கு அறிவியல் முன்னேறி உள்ளது.

இன்றைக்கு மக்களைப்பற்றிப் பேச யாரும் இல்லை. அனைவரும் அரசியலைப்பற்றியும், பதவியைப் பற்றியும் பேசுகிறார்கள். மக்களைப்பற்றிப் பேசுபவர்கள் மிகக்குறைவு.

பார்ப்பனர்கள் பல இழிவான மந்திரங்களைக் கூறித்திருமணம் நடத்தி வந்தனர். அதை மாற்றி அமைத்தவர் பெரியார்.

மணம் என்றால் பொருந்துதல் என்று பொருள். கலியாணம் எனில் மகிழ்ச்சி ஆரவாரம் நிறைந்த நிகழ்ச்சி என்று பொருள்.

மணமக்கள் ஒன்றுபட்டுப் பொருந்திய ஒரே மனவுணர்வுடன் வாழ வேண்டும் என்று குறிப்பிட்டு வாழ்த்தி, மணமக்களை உறுதி மொழி எடுக்க வைத்து மங்கல நாண் எடுத்துக் கொடுத்துத்தமிழ்த் திருமணம் நடத்தி வைத்தார்கள். மன்றல் - திருமணம் - என்ற சொல் விளக்கம் கொடுத்தார்கள், சடங்கு - எனில் அடக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி என்று பொருள் கூறி, அன்புவழி, அறிவுவழி, உடல்வழி - என வாழ்க்கை மூன்று வகை என்பதனைக் கூறி, அவையே தமிழர் கொண்டனர் என அறம், பொருள், இன்பம் என்று விளக்கினார்கள்.

பின்னர் திருவாளர்கள் க. வேலாயுதம், பி திருநாவுக்கரசு, சு. நடராசன், பால் - நடேசன், கே.வி. பச்சையப்பன், பி. சங்கரன், காசீம், வி.என். பழனியப்பன், க.வெ. நெடுமாறன், ஆசீம், பசீர், தேவநேயச்சித்திரன், வெ. நாகரத்தினம், பாலு, பாண்டியன் க. வேங்கடபதி, செ. வரதராசனார். எசு.பா. பச்சையப்பன், கொ. மாரியப்பன் முதலியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். சிலர் பாவலரேறு அவர்கள் விரிவாகப் பேசுவதற்கு என, சுருக்கிப் பேசினார்கள். அங்குப் பேசிய பலரும், பாவலரேறு அவர்கள் மிக நீண்ட நேரம் பேச வேண்டும் என்றும், அவர்களது கருத்துகளைக் கேட்கக் காத்திருக்கின்றோம் எனவும் கேட்டுக் கொண்டார்கள். நான்கு நாட்களாகப் போக்குவரத்து இல்லாமையினால் பாவலரேறு அவர்கள் நமக்குக் கிடைத்தார்கள் என மகிழ்ந்தார்கள்.

அனைவரும் வாழ்த்துரை வழங்கிய பின் பாவலரேறு அவர்கள் கருத்துச் செறிவுள்ள ஆழமாக உரையாற்றினார்கள்,

தமிழின உணர்வுக்குத் தமிழே அடிப்படை என்ற உணர்வை உண்டாக்கினார்கள். தமிழனாகத் தாம் பிறந்ததற்குப் பெருமை கொள்ளும் அதே நேரத்தில் தமிழினம் இழிந்த இனமாக உள்ளதே என்பதில் சிறுமையும் வருத்தமும் கொள்வதாகக் குறிப்பிட்டார். பெண்களை நாம் குற்றம் கூறக் கூடாது, அவர்கள் தாழ்வாக, இழிவாக நடந்து கொள்வதற்குக் காரணம் நாம்தானே. ஒருவனது மனைவி சரியாக இருந்தால்தான் அவனது இயக்கம் சரியானதாக இருக்கும்! என இவ்வாறு உரை ஆற்றித் கொண்டிருந்தபோதே மழை பொழியத் தொடங்கிவிட்டது. எனவே பேச்சு இடையில் நின்று விட்டது. கூடியிருந்தவர்கள் பாவலரேறு ஐயாவின் பேச்சு முழுவதையும் கேட்க இயலாத நிலை ஏற்பட்டு விட்டதே என மிகவும் வருந்தினர். 0

---

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா.ஆறுமுகம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவு எண் : TN/MS(C)/657

அனுப்புதல் :
**தமிழ் நிலம்**
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை — 5

பெறுநர்.
திரு/திருவாட்டி

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியீடுபவரும் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர் : தென்மொழி அச்சகம், 5. அருணாசலத் தெரு, சென்னை-5.